**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 357/2019 P.W.10/L.W.12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பாலசுந்தரம் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 08.07.2026.

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் குற்றப்பிரிவு அலுவலகத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் நான் 2014 வருடம் இரணியல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்த பொழுது சிறப்பு உதவி ஆய்வாளர் தனிஸ்லால் என்பவர் 27.11.2014 அன்று பதிவு செய்த குற்ற எண் 799/2014 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) என்ற வழக்கை நான் 27.11.2014ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் காலை 10.00 மணிக்கு சென்று சாட்சிகள் ரவீந்திரன் மற்றும் கணபதி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் சாட்சிகள் ராஜேஷ், ஸ்டாலின், அசோகன், குமார், புஷ்பராணி, ரவீந்திரன் மற்றும் கணேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். மேலும் இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரான ராஜரத்தினம் என்பவரை 27.11.2014ம் தேதியன்று 13.00 மணிக்கு இரணியல் ஜங்சனில் வைத்து கைது செய்து அவர் எடுத்து ஆஜர் செய்த TN75S1792 என்ற Hero Honda Passion Pro என்ற இருசக்கர வாகனத்தினை அத்தாட்சி மூலம் சாட்சிகள் அர்ஜுன் மற்றும்

சுரேஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றி நிலையம் கொண்டு வந்து கைது நடவடிக்கைகள் மேற்கொண்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது. அந்த **அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும் படிவம்–91 அ.சா.ஆ.8 ஆகவும் வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேலும் காயம்பட்ட ராஜேஷ் மற்றும் ஸ்டாலின் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கின் 2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான முரளி என்பவர் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று வெளியே சென்று விட்டார். மேலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் தனிஸ்லால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 341, 294(b), 323, 324, 506(ii) இ.த.ச சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 27.11.2014 இரவு 12.30 மணி என்றால், சரிதான். அதே தேதியில் இரவு 09.00 மணி முதல் 09.30 மணி வரையுள்ள நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால், சரிதான்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று புகார்தாரர் ராஜேஷ் என்பவரை காலை 07.00 மணிக்கு விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களை காவலர்கள் மூலம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவில்லை என்றால், சரிதான்.

3. ராஜேஷ் என்பவரின் புகார் வாக்குமூலத்தில் **"<u>தடுத்து நிறுத்தி</u>"** என்ற வார்த்தை இடைச்செறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மணியங்குழி மற்றும் இரணியல் ஆகியவை வேறு வேறு ஊர்கள் என்றால், இரணியல் எல்லைக்குள் தான் வரும். மணியங்குழி என்பது இரணியலிருந்து தக்கலைக்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது.

4. எனது விசாரணையில் இரணியல் கோணம் என்ற இடத்தில் சம்பவம் நடந்ததாக துலங்கவில்லை என்றால், சரிதான். எனது விசாரணையின் பொழுது ராஜேஷ் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தை உடைத்து ஓடையில் போட்டதாக கூறினாரா என்றால், இல்லை.

5. எனது விசாரணையின் பொழுது ராஜேஷ் என்பவர் **"செக்காரவிளையிலிருந்து எங்களை போக விடாமல் தடுத்து நிறுத்தினார்"** என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், செக்காரவிளையிலிருந்து அவர்களை பின்தொடர்ந்ததாக கூறியுள்ளார்.

6. எனது விசாரணையின் பொழுது ராஜேஷ் என்பவர் எந்த இடத்தில் வைத்து சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். செக்காரவிளை என்பது கண்டன்விளை பகுதியை தாண்டி உள்ளது என்றால், சரியல்ல. அது குருந்தன்கோடு போகும் வழியில் உள்ளது.

7. செக்காரவிளைக்கும் மணியங்குழிக்கும் இடையே 5 கி.மீ. தூரம் இருக்கும் என்றால், சரியல்ல. 3 கி.மீ. தூரம் இருக்கும். எனது விசாரணையின் பொழுது பட்டியல் சாட்சி 5 புஷ்பராணி என்பவர் **"போலிசார் அன்றைய தினம் இரவே மருத்துவமனைக்கு வந்தார்கள்"** என கூறவில்லை என்றால், சரிதான். காயம்பட்ட நபர் மருத்துவரிடம் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் தாக்கியதாக காயச்சான்றிதழில் உள்ளது என்றால், சரிதான்.

8. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுகும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.